# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2444/14 - 2025 ජූලි මස 08 වැනි අඟහරුවාදා - 2025.07.08**

2444/14 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: DSO/HOM/LAC/132.
காணி அமைச்சின் குறிப்பு இல.:
4-3/5/2020/எச்டபிள்யூ/217.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் இல. 602பி - கஹத்துடுவ வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கஹத்துடுவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் அதிபதி சார்பாக, கொழும்பு மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 30.12.2023 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 520037, துண்டு இல. 05, தாள் இல. 09 இல் துண்டு இலக்கங்கள் 2, 3, 5 வரை விபரிக்கப் பட்டுள்ள சுமார் 0.0924 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய மூன்று (03) காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல. 2**

காணியின் பெயர்: ஸ்ரீ சுமண மாவத்தை; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை (காணி எடுத்தல் ஏற்பாடு பூர்த்தி); விஸ்தீரணம்: 0.0105 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 3**

காணியின் பெயர்: தொம்பகஹவத்தை; விபரம்: ஸ்ரீ சுமண புஷ்பிகராமய; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: உடவெல சோமநந்த தேரர், அத்துமீறிக் குடியிருப்பவர்: ஸ்ரீ சுமண புஷ்பி கராமய, ஸ்ரீ சுமண புஷ்பிகராமய குடியிருப்பு (காணி எடுத்தல் ஏற்பாடு பூர்த்தி); விஸ்தீரணம்: 0.0051 ஹெக்டயார்.

3. துண்டு இல. 5

காணியின் பெயர்: மித்தர கங்கந்த மாவத்தை; விபரம்: வீதி; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை (காணி எடுத்தல் ஏற்பாடு பூர்த்தி); விஸ்தீரணம்: 0.0768 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹோமாகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பீ. ஏ. டீ. சிந்தக,
பிரதேச செயலாளர்,
ஹோமாகம.

பிரதேச செயலகம்,
ஹோமாகம,
2025, யூலை 23.

EOG 07 - 0078